வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 01.02.2025 சனிக்கிழமை | இதழ் : 32 | பக்கங்கள் : 12




மாருதி

Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433
076 284 4443

MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# வடக்கில் மக்களின் காணிகள் அவர்களுக்கே வழங்கப்படும்!

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர உறுதி

- பு.கஜிந்தன் -



யாழ்ப்பாணம், பெப்ரவரி 01

**மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படவேண்டும். வடக்கின் காணிப் பிரச்னை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டு வெகு விரைவில் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாண மக்களுக்கான மிக முக்கியமான திட்டங்களுக்காக, யாழ். ஜனாதிபதி மாளிகையை முற்றாக விடுவிக்கத் தயாராக இருக்கின்றோம்.

போரினால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் இன்னும் வடக்கு மாகாணத்தில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளதுடன் அது குறித்து ஆராயப்பட்டு தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

பிரதமரின் செயலாளர்

11



## மக்களை ஒன்றிணைக்கவே வல்வெட்டித்துறை வந்தேன்!

மக்கள் மத்தியில் அநுரகுமார

யாழ்ப்பாணம், பெப். 01

"நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதால்தான், வல்வெட்டித்துறைக்கு வருகை தந்துள்ளோம். நாம் இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்தவேண்டும்."

- இவ்வாறு நேற்று வல்வெட்டித்துறையில்

11

## மக்களுடன் நெருங்கிய உறவின்றேல் போதைப்பொருளை ஒழிக்கமுடியாது

### யாழில் பொலிஸாருக்கு ஜனாதிபதி ஆலோசனை

யாழ்ப்பாணம், பெப். 01

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நெருக்கமான உறவு இல்லாவிட்டால் போதைப்பொருளை ஒழிக்க முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் இடம் பெற்ற மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தியவேளை கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு கூறினார்.

02

## யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 33 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள்

### ஜனாதிபதியிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ்ப்பாணத்தில் 33 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுவதாக யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சுட்டிக்காட்டினார்.

யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே பதில் அரச அதிபர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும்

11

## ஜனாதிபதி நேற்று யாழ். வந்த நேரத்தில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்!



யாழ்ப்பாணம், பெப். 01

ஜனாதிபதி அநுரகுமாரவின் யாழ்.வருகையை முன்னிட்டு வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று கவனயீரப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். மாவட்ட செயலகம் அருகில் இக் கவனயீர்ப்பு இடம்பெற்றது. ஆரம்பத்தில் ஏ-9 வீதியில் ரயில் கடவைக்கு அருகில் பட்டதாரிகள் ஒன்றுகூடியபோது பொலிஸார் அவ்விடத்தில் அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக பழைய பூங்காவுக்கு அருகில் ஒன்று கூடிய பட்டதாரிகள் அங்கு கவனயீர்ப்பில்

02





## மாவையின் புகழுடலுக்கு ஜனாதிபதி நேரில் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மறைந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா வுக்கு மாவிட்டபுரத்தில் உள்ள

02

## யாழ். ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பேசுபொருளான தையிட்டி விகாரை!

யாழ்ப்பாணம், பெப். 01

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தையிட்டி விகாரை விவகாரம் தொடர்பில் சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், குறித்த விகாரை தனியார் காணி ஒன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்பு அல்லது அபிவிருத்தி நோக்கங்களின்றி குறித்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

11

## யாழ். மாவட்டத்தில் மிகவிரைவில் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம்

### நேற்று அனுமதி அளித்தார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப். 01

யாழ். மாவட்டத்தில் கடவுச்சீட்டு அலுவலகத்தைத் திறப்பதற்கான உத்தியோகபூர்வ அனுமதியை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று வழங்கினார்.

இரண்டு வாரமாக நாடளாவிய ரீதியாக தடைப்பட்ட கடவுச்சீட்டு வழங்கலைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி, யாழ். மாவட்டத்திலும் கடவுச்சீட்டு அலுவலகத்தை திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் யாழ். மாவட்ட அபிவிருத்திக்

02

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# சாவகச்சேரி வைத்தியசாலையின் வசதிகளை அதிகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 01

எதிர்காலத்தில் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளின் வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக போதனா வைத்தியசாலையின் பணிச்சுமையை மேலும் குறைக்க முடியும் என யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் பல்வேறு நிதி மூலங்கள் ஊடாக 10 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு நேற்று முன் தினம் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் கடந்த 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தப் பதவிக்கு வந்தேன்.

அப்போது யாழ். மாவட்டத்தில் ஓய்வுபெற்ற மூவரே வைத்திய அதிகாரிகளாகப் பணியாற்றினர்.

இன்று 350 பேர் பணியாற்றுக்கின்ற நிலைமைக்கு வந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறை சாம்பலிருந்தே மீண்டெழுந்திருக்கின்றது.

தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆதார மருத்துவமனைகள் ஓரளவு சிறப்பாக இயங்குகின்றமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் நெருக்கடிக்களை குறைக்க முடிந்துள்ளது.

எதிர்காலத்தில் சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளின் வசதிகளை அதிகரிப்பதன் ஊடாக போதனா வைத்தியசாலையின் பணிச்சுமையை மேலும் குறைக்க முடியும்.

அத்துடன் ஆளணி மீளாய்வு அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் திறந்து வைக்கப்பட்ட சிசுக்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவு ஒட்டுமொத்த வடக்கு மாகாணத்துக்கும் சேவைகளை வழங்கும்.

முக்கியமாக கடந்த டிசெம்பர் மாதம் பரவிய எலிக்காய்ச்சலை இங்குள்ள மருத்துவர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் மற்றும் பொதுச் சுகாதாரத்துறையினர் இணைந்து கட்டுப்படுத்தினர்

இது தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு மிகச் சிறந்த பாராட்டைத் தெரிவித்துள்ளது. இது உங்களின் அர்ப்பணிப்பான சேவைக்கு கிடைத்த வெற்றி - என்றார். (அ)

# தனது வாழ்நாளை தமிழ் மக்களின் உரிமைக்காக அர்ப்பணித்த மாவை

## வடக்கு மாகாண ஆளுநர் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 01

தனது வாழ்நாளை தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணித்து, அவர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக அயராது உழைத்தவர் மாவை சேனாதிராசா என வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்

'தமிழ் மக்களை நீண்ட காலம் பிரதிநிதித்துவப்படுத்திய மூத்த அரசியல்வாதியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவருமான சோ.சேனாதிராஜாவின் மறைவை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

அவர் தனது வாழ்நாளை தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சமூக மேம்பாட்டுக்காக அர்ப்பணித்து, அவர்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக அயராது உழைத்தவர். அவரது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் தமிழ் மக்களுக்கான தியாகம் என்பன அரசியல் நிலப்பரப்பில் ஒரு அழியாத அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளன.

யாழ். மாவட்ட செயலராக நான் முன்னர் பணியாற்றிய காலத்தில், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவராக இருந்த அவர், தமிழ் சமூகத்துக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியன. வலி. வடக்கின் மீள்குடியமர்வு மற்றும் அந்தப் பிரதேசத்தின் உயர்வுக்காக அவர் செய்த சேவைகளை அருகிலிருந்து பார்த்திருக்கின்றேன்.

காலம் முழுவதையும் இந்த மக்களுக்காகவே செலவிட்ட ஒருவரை இன்று இழந்து நிற்கின்றோம். வடக்கு மாகாண மக்கள் சார்பாக, அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அந்த இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கண்ணகை அம்மன் கோவில் அலங்கார உற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.01

புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோவில் அலங்கார உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமானது.

எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை நடைபெற்று அலங்கார உற்சவம் நிறைவு பெறவுள்ளது. (எ-02)

## மாவையின்...

அவரது இல்லத்துக்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா கடந்த புதன் கிழமை காலமானார்.



அவரது பூதவுடல் மக்கள் அஞ்சலிக் காக மாவிட்டபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார். (அ)

# தமிழ்த் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளியே மாவை!

## சீ.வீ.கே.சிவஞானம் இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 01

தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி மாவை சேனாதிராசா என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராசாவின் பூத்தவுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: -

மாவை சேனாதிராசாவின் இழப்பு என்பது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்குமான இழப்பாகும்.

தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி.

மக்களுக்காக தனது வாழ்க்கையில் பல தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் செய்த ஒருவர். கட்சியை கட்டி வளர்ப்பதில் எல்லோரையும் அந்நியோன்யமாக அரவணைத்து சென்ற ஒருவர்.

அவருடைய இழப்பு என்பது இலங்கை தமிழரசுக் கட்சிக்கு பாரிய இழப்பு என்பதுடன் அது கட்சிக்கு பாரிய தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

உங்களுடைய நினைவோட்டம் தமிழரசுக் கட்சி சார்ந்து எல்லாவேறுபாடுகளையும் மறந்து அவருடைய நினைவாக பிளவுகள் பிரிவுகள் இன்றி ஒற்றுமையாக முன் செல்லவேண்டும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியை வளர்த்து மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டு வர வேண்டும் அது மாவை சேனாதிராஜா அவருடைய பெயராலேயே நிறைவேற வேண்டும்.

நல்ல ஆத்மா வஞ்சகம் இல்லாத உள்ளத்தை கொண்டவர். அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன்-என்றார்.

## மக்களுடன் நெருங்கிய...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைந்து கொள்வது மிகக் குறைவு.

சட்டவிரோத போதைப் பொருள்பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டுமானால் பொலிஸார் பொது மக்களின் மனதை வெல்லவேண்டும்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என் றால், சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்கள் பொலிஸாரிடம் முறையிடும்போது முறையிடுவோர் தொடர்பான தகவல்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்குச் செல்கிறது- என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் சுனில் ஹந்துநெந்தி, வவுனியா வில் ஒரு கிராமத்துக்குச் சென்றேன். அங்கு பொலிஸாரை மக்கள் திட்டி தீர்த்தார்கள்.

சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பொலிஸார் உடந்தையாக இருப்பதாக என்னிடம் தெரிவித்தார்கள். இவ்வாறு மக்கள் மத்தியில் பொலிஸார் தொடர் பில் மாற்றுக் கருத்து பரவலாக உள்ளது - என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த வட பிராந்திய பொலிஸ் மா அதிபர் தனபால, சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் தகவல் அடிப்படை யில் பல கைது நடவடிக்கைகள் இடம் பெற்றுள்ளன.

கீழ்நிலை அதிகாரிகள் தவறு விட்டால் உயர் அதிகாரிகளிடம் முறையிடுங்கள் அல்லது பொலிஸ் விசேட தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி தகவல்களைக் கூற முடியும். முறைப்பாட்டாளர் தன்னை அடையாளப் படுத்தவேண்டிய தேவை இல்லை. தகவல்களை துல்லியமாக வழங்கினால் நடவடிக்கை எடுப்போம்-என்றார். (அ-05)

# கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் எம்முடன் சமநேரம் பயணித்த மாவை அண்ணா!

## டக்ளஸ் தேவானந்தா இரங்கல்

யாழ்ப்பாணம், பெப். 01

கொள்கை வேறு, கோட்டை வேறாக இருப்பினும் மாவை சேனாதிராசா அண்ணா, அரசியல் களத்தில் எம்முடன் சம காலத்தில் பயணித்தவர் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டகளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராசாவின் மறைவுக்காக டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தானே தேர்ந்தெடுத்த தனது அரசியல் வழியில் இறுதி வரை உறுதியுடன் இருந்தவர். ஆரம்ப காலச் சூழலில் அரச நெருக்கடிகளை அடுத்தடுத்து சந்தித்தவர்.

இளமைக்காலத்தில் சிறைகளில் அடைபட்டு இன்னல்களை எதிர்கொண்டவர். சக பாராளுமன்ற உறுப்பினராக இருந்து தனது வழிமுறையில் குரல் எழுப்பியவர்.

ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க மாவை அண்ணை பாரம்பரிய தமிழரசு கட்சி உறுப்பினர்களால் ஆழமாக நேசிக்கப்பட்டவர்.

எல்லோர் கனவுகளும் வெல்லும் காலம் பிறக்க உழைப்போம். இழப்பின் துயரில் வதைபடும் குடும்பத்தவர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் சகலருக்கும் ஆழ்மன ஆறுதல் - என்றுள்ளது. (அ)

## ஜனாதிபதி...

ஈடுபட்டனர்.

ஜனாதிபதியை நேரடியாக சந்திப்பதற்கு இவர்கள் எடுத்த முயற்சி கைகூடவில்லை.(அ-05)

## யாழ்.மாவட்டத்தில்...

குழுக்கூட்டம் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று காலை 10மணிக்கு ஆரம்பமாகியது. இதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடவுச்சீட்டு அலுவலகத்தை யாழ். மாவட்ட செயலகத்தில் திறப்பதற்கு வழிவகைகள் எதுவும் இருக்கின்றதா என யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபனிடம் ஜனாதிபதி கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் வழங்கிய மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபன், எமது மாவட்ட செயலகத்தில் இடப்பற்றாக் குறை இருக்கின்றது. இருப்பினும் வடக்கு மக்களுக்கு தேவையான ஒரு விடயமாக கடவுச்சீட்டு அலுவலகம் காணப்படுவதால் அதற்கான இடத்தை ஒதுக்குவது குறித்து ஆலோசிக்கலாம் என தெரிவித்தார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.02.2025 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 19

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## திரு. ஜனாதிபதி அவர்களே!

கடந்த காலத்தில் ஆட்சியாளர்கள் மக்களை பிரித்தாண்டார்கள் - அதற்கு இனி இடமில்லை - நாம் அனைவரும் இலங்கையர்கள் என்னுமடிப்படையில் அனைவரும் ஒன்றாக கொண்டாடக் கூடி நிகழ்வொன்றை நான் அறிமுகம் செய்யவுள்ளேன் - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்திருக்கின்றார்.

அனைவரும் இலங்கையர்களாக சிந்திப்பதும், செயல்படுவதும் நல்ல விடயம் ஜனாதிபதி அவர்களே - ஆனால், அதற்கு முன்னர் வடக்கு, கிழக்கை தங்களின் வரலாற்று வாழ்விடமாக கொண்டிருக்கும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை உறுதிப்படுத்தக் கூடிய சில அடிப்படையான விடயங்களை முதலில் செய்துவிட்டு, அதன் பின்னர் அனைவரையும் இலங்கையர்களாக இணையுமாறு அழைப்பு விடுத்தால் அதில் பொருளுண்டு. ஆனால், எதனையுமே செய்யாமல் வெறுமனே இலங்கையர்களாக ஒன்றிணைவது என்றால் எவ்வாறு?

நாம் அனைவரும் இலங்கையர்கள் என்று சிந்திப்பதும் அதனை நோக்கி அணிதிரள்வதும் பரஸ்பர கௌரவத்திலும், சமவாய்ப்புக்களிலும்தான் தங்கியிருக்கின்றது. ஜனாதிபதி எளிமையாக இருக்கின்றார் - கடந்த காலத்தில் ஜனாதிபதிகள் செயல்பட்டமை போன்று நடந்து கொள்ளவில்லை - மக்களின் சொத்துக்களை வீணாக்கிவிடக் கூடாது என்னுமடிப்படையில் பொறுப்புடன் அரசாங்கம் செயலாற்ற முயற்சிக்கின்றது, ஆடம்பர செலவுகளை இரத்துச் செய்கின்றது, திருப்திப்படக் கூடியவகையில் இல்லாவிட்டாலும் கூட, சில விடயங்களில் ஊழல்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முயற்சிக்கின்றது - இதனால் ஊழல் செய்துவிட்டு இலகுவாக தப்பிவிடலாம் என்று எண்ணியவர்கள் அஞ்சக் கூடிய அரசியல் சூழலொன்று மெதுவாக முகம் காட்டுகின்றது - இவைகள் அனைத்துமே வரவேற்கப்பட வேண்டிய விடயம்தான் - இதற்காக அரசாங்கத்தை பாராட்டலாம் - ஆனால் இதனால் எல்லாம் அனைவரும் இலங்கையர்களாக சிந்திப்பதாக கூறிவிட முடியாதல்லவா!

அனைவரும் இலங்கையர்களாக சிந்திப்பது என்பது அடிப்படையில் ஓர் அரசியல் நிலைப்பாடாகும். அவ்வாறானதொரு நிலைப்பாட்டை ஏனைய சமூகங்கள் மீது திணிக்க முடியாது. கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஒப்பீட்டடிப்படையில் கணிசமான தமிழ் மக்கள் வாக்களித்திருக்கின்றர் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு, அனைவரும் இலங்கையர்களாக ஒன்றுபடுங்கள் என்று அழைப்பு விடுப்பது அடிப்படையிலேயே தவறானது.

தமிழ் மக்களை சம அந்தஸ்துள்ள மக்களாக கருதுவது உண்மையாயின் முதலில் மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் - அதன் பின்னர் அரசியலமைப்பிலுள்ளவாறு மாகாண சபைக்கான முழுமையான அதிகாரங்களை உறுதிப்படுத்துங்கள்- பிரேமதாச காலத்தில் பறிக்கப்பட்ட அனைத்தையும் மீளவும் மாகாண சபைக்கே கொண்டு வாருங்கள். மேலும், ஆளுநர்களின் அதிகாரங்களை வரையறுக்கும் வகையில் புதிய ஏற்பாடு ஒன்றை கொண்டுவாருங்கள். சுருங்கச் சொல்வதானால், இந்தியாவில் இருப்பது போன்ற ஒரு மாகாண ஆட்சி முறைமையை உறுதிப்படுத்துங்கள். இதன் பின்னர் இலங்கையர்களாக ஒன்றிணைவோம் என்று கூறினால் அதனுடன் முரண்பட எவரும் இருக்க மாட்டார்கள். தமிழ் மக்கள் உங்களோடு நிற்பார்கள்.

## ஐ. ஓ. எம். நிறுவனப் பிரதானியுடன் யாழ். மாவட்ட அரச அதிபர் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப்.01

இலங்கை மற்றும் மாலை தீவுக்கான ஐ. ஓ. எம். நிறுவனத்தின் பிரதானி திருமதி கிறிஸ்ரின் பாகோ யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வருகை தந்தார்.

இந்த நிலையில் மரியாதை நிமித்தமாக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து, மாவட்டத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.



இந்தச் சந்திப்பில் ஐ. ஓ. எம். நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (எ-05)

## வவுனியா கற்குழி பகுதியில் இளைஞர் குழு அட்டகாசம் !

### வாள், பொல்லுகளால் தாக்கி பணம் பறிப்பு

வவுனியா, பெப்.01

வவுனியா, கற்குழி பகுதியில் இளைஞர் குழு வீதியால் சென்றவர்களை வழிமறித்து வாள், பொல்லுகளால் தாக்கி அவர்களிடம் பணம் பறித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அறிவித்தும் அவர்கள் வரவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 07. 30 மணி முதல் 09.00 மணி வரை இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மகா வித்தியாலயம் முன்பாகவுள்ள வீதி மற்றும் கற்குழி செல்லும் வீதி என்பவற்றில் மது போதையில் வாள்கள், பொல்லுகளுடன் நின்ற இளைஞர் குழு ஒன்று குறித்த வீதிகளில் கற்களை போட்டும், போத்தல்களை உடைத்தும் வீதியால் சென்றவர்களை வழிமறித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்திப் பணம் பறித்துள்ளது.

இதன்போது, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 107 இற்கு அழைப்பு எடுத்து அறிவித்த போதும் பொலிஸார் வரவில்லை எனவும், தாம் தாக்குதல் மேற்கொண்டவர்களிடம் இருந்து தப்பிச் சென்று விட்டதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (எ-10)

## வடமராட்சி மகளிர் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, பெப். 01

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் 3ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 01.30 மணிக்கு கல்லூரி முதல்வர் திரமதி சத்திய பாமா நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில், பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) மோகனசுந்தரம் தெய்வேந்திரா கலந்து கொள்வார். (எ-02)

## வவுனியாவில் ரயிலில் மோதிய பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

வவுனியா, பெப்.01

வவுனியாவில் ரயிலில் மோதிய போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளதாக ஈரப்பெரியகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.


யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் நேற்றுக் காலை 09. 00 மணியளவில் வவுனியா, அவுசதப்பிட்டியில் கடவையை கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற 44 வயதுடைய போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த அவர் வவுனியா பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். சம்ப வம் தொடர்பில் ஈரப் பெரிகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




(எ-10)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். பயணங்களால் புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

**இடபம்**
உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உற்சாகமான நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்**
சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**துலாம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**விருச்சிகம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள்.

**தனுசு**
பேச்சில் முதிர்ச்சி தெரியும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடுகளை கட்டும்.

**மகரம்**
நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புது முடிவுகள் எடுப்பீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள்.

**மீனம்**
சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும்.

# காற்றாலை, கனிய மணல் அகழ்வால் மன்னாரில் ஏற்படும் பிரச்னை என்ன?

## சுற்றாடல் நீதிக்கான குழு ஆராய்வு

*மன்னார், பெப். 01*

மன்னார் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலைய குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

மன்னாருக்கு சென்ற சுற்றாடல் நீதிக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் ஹேமந்த விதானகே உள்ளிட்ட குழுவினர் மன்னார் தீவுப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு குறித்து பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடினர்.

குறித்த குழுவினர், மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளையும் ஆராய்ந்தனர்.

இதன் பின்னர் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் மார்க்கஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

இதில், பிரஜைகள் குழுவின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

இதன் போது, காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிம மணல் அகழ்வால், மன்னார் தீவில் ஏற்பட்டு வருகின்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டது. (எ)

# வவுனியாவில் போதைப்பொருளுடன் வயோதிப பெண் ஒருவர் கைதானார்

*வவுனியா, பெப். 01*

வவுனியாவில் போதைப் பொருளுடன் வயோதிபப் பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மடுகந்தை விசேட அதிரடிப் படையினரால் செட்டிக்குளம் பகுதியில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடமிருந்து 1740 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 2380 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-10)

# விக்டர் ஐவனின் அஞ்சலிக் கூட்டம்

*கிளிநொச்சி, பெப்.01*

அண்மையில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும் ராவய பத்திரிகையின் ஆசிரியருமான விக்டர் ஐவனின் அஞ்சலிக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை10 மணிக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறும்.

ஆர்வலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும் எனவும் அஞ்சலி உரைகள், காந்தீயம் விக்டர் ஐவன் சிறப்பிதழ் வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போதையில் வர்த்தக நிலையத்தில் அட்டகாசம் புரிந்த மதகுரு கைது!

*வவுனியா, பெப்.01*

வவுனியா, புகையிரத வீதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் மது போதையில் அட்டகாசம் செய்த மதகுரு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, புகையிரத நிலைய வீதியில் நேற்று முன்தினம் இரவு 09.30 மணியளவில் மது போதையில் சென்ற மதகுரு ஒருவர் அப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் கொத்து ரொட்டி போடும் கூட்டு கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தியதுடன், அருகில் இருந்த தொலைகாட்சி திருத்துமிடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்த பழைய தொலைக் காட்சி பெட்டிகளையும் சேதப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து குறித்த வர்த்தக நிலைய உரிமை யாளர்கள் மற்றும் வீதியில் சென்றோர் மதகுருவை மடக் கிப்பிடித்து வைத்திருந்ததுடன் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த மதகுருவை கைது செய்ததுடன், வவுனியா பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளதாக தெரிவித்தனர். (எ-10)

# சிறப்பாக நடைபெற்ற கால்கோள் விழா

*வவுனியா, பெப்.01*

தரம் -1 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா வவுனியா பாடசாலைகளில் சிறப்பாக நடைபெற்றன.

தரம் -1 இற்கு மாணவர்களை உள்வாங்கும் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டது.

இதற்கமைவாக, வவுனியா விபுலானந்தா கல்லூரியில் கால்கோள் விழா அதிபர் திருமதி ஞா. மோகனதாஸ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை முன்றலிலிருந்து விருந்தினர்கள், புதிய மாணவர்கள் பாண்ட் வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டதுடன், பாடசாலையின் தரம் 2 மாணவர்கள் புதிய மாணவர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். அத்துடன் நடனம், பாடல் முதலிய நிகழ்வுகளும் தரம் - 1 மாணவர்களை மகிழ்விக்கும் வகையில் நடைபெற்றன.



இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த. முகுந்தன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு வலய ஆரம்ப கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் றபி அஸ்லம், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் பா. லம்போதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு, பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு அபாயத்தில் மேல் மாகாணம்!

கொழும்பு, பெப். 01
இவ் வருட ஆரம்பம் முதல், 30 நாட்களில் டெங்கு நோயா ளர்களாக பதிவாகியுள்ள நோயாளர்களில் மேல் மாகா ணத்திலே அதிகளவான நோயா ளர்கள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாட்டில் டெங்கு நோய் பாதிப்பு நாளுக்கு நாள் அதிக ரித்து வரும் நிலையில், ஜனவரி 1 முதல் 30ஆம் திகதி வரை யான காலப்பகுதியில் 4,761 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள் ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

குறிப்பாக, மேல் மாகாணத் தில் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங் களில் 2,156 நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், நாட்டில் அதிகளவான தொற்றாளர்கள் இந்த மாகாணத்திலேயே காணப்படுவதாக தகவல் வெளி யாகியுள்ளது.

அத்துடன், வட மாகாணத் தில் 250, மத்திய மாகாணத்தில் 431, மற்றும் சப்ரகமுவ மாகா ணத்தில் 394 நோயாளர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் டெங்கு தொற்று தொடர்ந்து பரவி வரும் நிலை யில், இந்த ஆண்டின் இதுவரை யான காலப்பகுதியில் 2 டெங்கு மரணங்களும் பதிவாகியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமெரிக்கா நாடு கடத்தவுள்ளோர் பட்டியலில் 3000 இலங்கையர்கள்!

கொழும்பு, பெப். 01
**அமெரிக்காவினால் நாடு கடத்தப்படவுள்ளவர்களின் பட்டியலில் 3000 இலங்கையர்களும் உள்ளனர் என அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு தெரிவித்துள்ளது.**

2024 நவம்பர் 24ஆம் திகதி வரை நாடு கடத்துவதற்கான இறுதி உத்தரவுக்காக காத்தி ருக்கும் இதுவரை தடுத்துவைக் கப்படாத இலங்கையர்களின் எண்ணிக்கை 3065 என அமெ ரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு தெரி வித்துள்ளது.

சட்ட மற்றும் ஏனைய சவால்கள் காரணமாக அனை வரையும் உடனடியாக நாடு கடத்த முடியாது என தெரிவித் துள்ள அமெரிக்க குடிவரவு மற் றும் சுங்க அமுலாக்கல் பிரிவு, புகலிடக்கோரிக்கைகள் கார ணமாகவும் வெளிநாட்டு அர சாங்கங்கள் ஒத்துழைக்காததன் காரணமாகவும் நாடு கடத்துவ தில் பிரச்னைகளை எதிர் கொண்டுள்ளதாக குறிப்பிட் டுள்ளது.

அனைத்து நாடுகளும் குடியு ரிமை குறித்து ஆராய வேண் டும்,பயண ஆவணங்களை வழங்கவேண்டும், நாடு கடத் தப்பட்ட சட்டவிரோத குடி யேற்றவாசிகளுடன் வரும் விமானங்களை ஏற்கவேண்டும் என அமெரிக்கா எதிர்பார்ப் பதாகவும் அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமு லாக்கல் பிரிவு தெரிவித்துள்ளது.

அமெரிக்கா நாடு கடத்திய வர்களுடன் வரும் விமானங் களை ஏற்க மறுக்கும் நாடுகளை யும் அமெரிக்காவின் குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவு பட்டியலிட்டுள்ளது. எனினும் இந்த பட்டியலில் இலங்கை இடம்பெறவில்லை. (அ)

# வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஊழல்வாதிகளைத் தண்டிப்போம்

## அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, பெப். 01
அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஊழல்வாதிகள் தங்களை பாது காத்துக் கொள்ள முயற்சிக் கிறார்கள். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஊழல் வாதிகளை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம் என வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-பெரும்போக விவசாய விளைச்சல் அறுவடை தற் போது ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இம்முறை 2.9 மில்லியன் மெற்றிக் தொன் நெல் விளைச் சல் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. நெல்லுக் கான உத்தரவாத விலை இன் னும் ஓரிரு நாட்களில் நிர்ண யிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து நேர டியாக நெல்லை கொள்வனவு செய்வதற்கு உரிய ஆலோசனை கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர் வரும் சித்திரை புத்தாண்டு காலப்பகுதியில் அரிசி உட்பட அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.



சந்தையில் நிலவும் தேங்காய் தட்டுப்பாடு மற்றும் விலை யேற்றம் குறித்து வர்த்தகம், உணவு பாதுகாப்பு, பெருந் தோட்டத்துறை மற்றும் கைத் தொழில் அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களை ஒன்றி ணைத்து விசேட நடவடிக்கை வகுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 3000 முதல் 3100 மில்லியன் தேங்காய் கள் உற்பத்தி செய்யப்பட்டுள் ளன. தேவையை காட்டிலும் கேள்வி அதிகமாக காணப்படு கிறது. ஆகவே தேங்காய் தட் டுப்பாட்டுக்கு தொழில்நுட்ப ரீதியில் தீர்வு முன்வைக்கப் படும்.

கடந்த காலங்களில் அரச நிதியை மோசடி செய்து அரச அதிகாரத்தில் தப்பித்துக் கொண்டவர்கள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அரசியல் பழிவாங்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஊழல்வாதிகள் தங்களை பாது காத்துக் கொள்ள முயற்சிக் கிறார்கள்.

மக்களுக்கு வழங்கிய வாக் குறுதிக்கமைய ஊழல்வாதிகளை சட்டத்தின் முன் முன் னிலைப் படுத்துவோம்-என்றார். (அ)

# சட்ட விதிமுறைப்படியே கொள்கலன்கள் விடுவிப்பு

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, பெப். 01
சர்ச்சைக்குரிய 323 கொள்க லன்களும் சட்ட விதிமுறைக ளுக்கு அமையவே விடுவிக்கப் பட்டுள்ளது. இந்த விடயத்தில் மோசடி இடம்பெற்றுள்ளதாக கூறுபவர்கள் உரிய சாட்சியங்க ளுடன் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும். ஆனால் இந்த விடயத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்கட்சியினர் மேல் மாகாண ஆளுநருக்கு எதிராக சேறு பூசும் நடவடிக்கையே முன்னெ டுத்துள்ளனர் என போக்கு வரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது சஜித் பிரேமதாஸ தலை மையிலான அணியினர் அவர் களை பாதுகாக்க முற்படுகின்ற னர். உண்மையில் சஜித் பிரேம தாச தற்போது யாருடன் கூட் டணி அமைத்துள்ளார் என் பதை மக்களுக்கு கூறவேண்டும். எமக்கு கிடைத்துள்ள மக்கள் ஆணையுடன் எவரும் விளை யாட வேண்டாம் என அமைச் சர் மேலும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-சர்ச்சைக்குரிய 323 கொள் கலன்களும் சட்ட விதிமுறைக ளுக்கு அமையவே விடுவிக் கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விடயம் தொடர்பில் சுங்கத்திணைக்களமும் தெளி வுபடுத்தியுள்ளது.சுங்கத் திணைக்களத்தின் விசேட அதிகாரிகள் குழுவினால் இந்த கொள்கலன்கள் விடுவிக்கப் பட்டுள்ளன. இதற்கு முன்னரும் இதுபோன்ற சம்பவங்கள் 5 தடவைகள் இடம்பெற்றுள் ளன.அவசர நிலைமை ஒன்றின் போது எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் அறிந்துள்ளார்கள். அதற்கேற்பவே அதிகாரிகள் தற்போதும் செயற்பட்டுள்ளார்கள்.

துறைமுகத்திற்குள் மோசடி இடம்பெறுவதாகவும் அது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதா கவும் ஊடகமொன்று செய்தி வெளியிட்டு இருந்தது. அண் மையில் புகையிரத ஈ- பய ணச்சீட்டில் மோசடி இடம் பெறுவதாக கூறப்பட்டது. தற்போது விசாரணைகள் இடம்பெறுகின்றன. சந்தே கபர்களும் கைது செய்யப்பட் டுள்ளனர். இந்த விடயத்தில் தொடர்புடைய அனைவரை யும் நாம் கைது செய்வோம். எவரையும் தப்பிச்செல்ல இடமளிக்கமாட்டோம்.

ராஜபக்ஷக்களை கைது செய்ய முற்படும் போது சஜித் தரப்பினர் முணங்கிக் கொண் டிருக்கிறார்கள்.

யோஷிதவை கைது செய்யும் போது எதிர்க் கட்சியின் ஹர்ஷன ராஜகரு ணாவுக்கு கவலை ஏற்படுகி றது.இரண்டு பக்கத்திலும் உள்ள திருடர்கள் ஒன்றிணைந் துள்ளனர். இவர்கள் பெரிய திருடரை பாதுகாக்க ஒன்றி ணைந்துள்ளனர் -என்றார். (அ)

# விடுவித்த கொள்கலன்களுக்கும் எனக்கும் எந்த தொடர்புமில்லை

## மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப்

கொழும்பு, பெப். 01
பரிசோதனைகள் எதுவும் இன்றி சுங்கத்தில் இருந்து விடு விக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படும் கொள்கலன்களுக் கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் தெரி வித்தார்.

இலங்கை சுங்கத்தில் தீவிர பரிசோதனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 323 கொள் கலன்கள் பரிசோதனை எதுவும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தனக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் தெரிவிக்கையி லேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு சிவப்பு முத்திரை பதித்திருந்த 323 கொள்கலன்கள் சுங்கத்தில் இருந்து பரிசோதனை எதுவும் இன்றி விடுவிக்கப்பட்டுள் ளதாகவும் அவை எனக்கு சொந்தமானவை எனவும் ஒருசில ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

எனக்கு எதிராக இவ்வாறு



தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதுடன் அந்த கொள்கலன்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அந்த கொள்கலன்க ளில் ஒன்று கூட எனது பெய ரில் இல்லை.

குறித்த கொள்கலன்கள் எக்ஸ்போ லங்கா நிறுவனத் துக்கு சொந்தமானவை என பல்வேறு தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். ஆனால் எக்ஸ்போ லங்கா நிறுவனத்துக் கும் எனக்கும் தற்போது எந்த தொடர்பும் இல்லை.

மேல் மாகாண ஆளுநராக பதவி ஏற்பதற்கு முன்னர் குறித்த நிறுவனத்தில் இருந்து முற்றாக விலகியுள்ளேன். என் றாலும் தெரிவிக்கப்படும் குற் றச்சாட்டு தொடர்பில் கவலை யடைகிறேன்-என்றார். (அ)

# தேசிய வீடமைப்பு அதிகார சபை தலைவர் ரணதுங்க இராஜினாமா!

கொழும்பு, பெப். 01
தேசிய வீடமைப்பு அபிவி ருத்தி அதிகார சபையின் தலை வர் என்.பி.எம். ரணதுங்க இரா ஜினாமா செய்துள்ளார்.

இராஜினாமா கடிதம் விட யத்திற்கு பொறுப்பான அமைச் சரிடம் கையளிக்கப்பட் டுள்ளதாக அவரது அலுவலகம் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி குறித்த பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, அவர் அந்தப் பதவியில் 3 மாதங்கள் மட் டுமே பணியாற்றி வந்த நிலை யில், தனது இராஜினாமாவுக் கான காரணங்களை விளக்கி ஒரு நீண்ட கடிதத்தை எழுதி யுள்ளார்.

இதேவேளை,இலங்கை போக்குவரத்து சபையின் தலை வர் ரமால் சிறிவர்தன தனது பதவியை இராஜினாமா செய்த தாக கடந்த 29 ஆம் திகதி தெரி விக்கப்பட்டது.

மேலும், தேசிய தொலைக் காட்சியின் தலைவராக நியமிக் கப்பட்ட கலாநிதி செனேஷ் திசாநாயக்க பண்டாரவும் சமீ பத்தில் பதவி விலகியமை குறிப் பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை அரசமைப்பு திருத்தமின்றிக் குறைக்கலாம்!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க அறிவிப்பு

கொழும்பு, பெப். 01

அரசியலமைப்பு திருத்தம் இன்றி, முன்னாள் ஜனாதிபதிகளின் அனைத்து வரப்பிரசாதங்களையும் குறைக்க முடியும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைக்கையில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளைக் குறைப்பதற்கு தீர்மானித்தது.

இதற்கமைய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பிலேயே அதிகளவு பேசப்பட்டது.

கொழும்பு விஜேராம வீதியில் உள்ள உத்தியோக பூர்வ இல்லத்தின் வாடகை தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பல சந்தர்ப்பங்களில் அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், புதிய அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களால் அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் தங்களது உத்தியோகபூர்வ இல்லங்களை விட்டு வெளியேறுவதற்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்களை அரசியலமைப்பு திருத்தத்திற்குப் பின்னரே குறைக்கவோ அல்லது திருத்தவோ முடியும்



என சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில் அரசியலமைப்பை திருத்தாமல் நீக்கப்படக்கூடிய முன்னாள் ஜனாதிபதிகளின் வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகள் அனைத்தும் நீக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

## நவீன வசதிகளுடன் 1,000 புதிய பஸ்கள்!

கொழும்பு, பெப். 01

எதிர்காலத்தில் நவீன வசதிகளுடனான 1,000 புதிய பஸ்களை இணைப்பதன் ஊடாக பொதுப் போக்குவரத்தை வலுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் டொக்டர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் தற்போது உள்ள 5,800 பஸ்களில் 4,500 பஸ்களை மாத்தரமே பாதைகளில் போக்குவரத்துக்காகப் பயன்படுத்த முடியும் என்றும், பயணிகளுக்கு சிறந்த சேவையை வழங்க 7,400 பஸ்கள் அவசியம் என்றும் விசேட ஆய்வின்போது அமைச்சர் தெரிவித்தார். (அ)

## ஆசிய அபிவிருத்தி வங்கி குழுவுடன் ஜனாதிபதியின் செயலாளர் சந்திப்பு


கொழும்பு, பெப். 01

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையின் சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர்.

அதன்படி இந்நாட்டில் சுற்றுலாத்துறை முன்னேற்றத்திற்காக திட்டமிட்டிருக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து ஜனாதிபதியின் செயலாளர் தெளிவுபடுத்தினார்.

புதிய சுற்றுலா வலயங்களை நிறுவுதல் மற்றும் சுற்றுலாத்துறையின் எதிர்கால திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அரச நிறுவனங்களின் பங்களிப்பு குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.



இலங்கையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவித்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், புதிய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தினால் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து திருப்தியடைவதாகவும் தெரிவித்தனர். (அ)

## மனித பாவனைக்கு உதவாத 30000 கோதுமைமா மூடைகள்!

கொழும்பு, பெப். 01

வெல்லம்பிட்டி, சேதவத்தை பிரதேசத்தில் உள்ள களஞ்சிய சாலை ஒன்றிலிருந்து மனித பாவனைக்கு உதவாத 30,000 கோதுமை மா மூடைகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இந்த கோதுமை மா மூடைகள் கைப்பற்றப்பட்டன.

சுமார் 25 கிலோ கிராம் நிறையுடைய கோதுமை மா மூடைகளே கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த கோதுமை மா மூடைகள் பொதுமக்கள் பாவனைக் காக விற்பனை நிலையங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டதா என்பது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை யினால் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த களஞ்சியசாலையிலிருந்து 25 கிலோ கிராம் நிறையுடைய 8 ஆயிரம் சம்பா அரிசி மூடைகள் கைப்பற்றப் பட்டன. இந்த அரிசி மூடைகள் நீண்ட நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டில் அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்ட போதும், இந்த அரிசி மூடைகள் சந்தைகளில் விநியோகிக்கப்படவில்லை என விசாரணையில் தெரியவந் துள்ளது. (அ)

## போக்குவரத்துத்துறையின் சிக்கல்களுக்கு தீர்வு காண 3 அமைச்சுசார் உப குழுக்கள்!

கொழும்பு, பெப். 01

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் துறையில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளைக் கண்டறிய 3 அமைச்சுசார் உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் நடைபெற்ற முதலாவது அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அலுவல்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

போக்குவரத்து தொழிற்துறையிலுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் முதலாவது உப குழு நியமிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான ஜகத் விதான, திணிந்து சமன், தேவானந்த சுரவீர ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத்துறை சம்பந்தமான சட்ட ரீதியான கட்டமைப்பை வலுப்படுத்தும் வழி நடத்துதல் தொடர்பில் மற்றுமொரு உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களான லக்மாலி ஹேமச்சந்திர, சுகத் வசந்த டி சில்வா, தனுர திஸாநாயக்க, சுஜீவ திசாநாயக்க இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத் துறையுடன் தொடர்புடைய மேலதிக சேவைகளை உருவாக்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதை நோக்காகக் கொண்டு மூன்றாவது உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவீந்திர பண்டார மற்றும் தனுஷ்க ரங்கநாத் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## 77ஆவது சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம்!

கொழும்பு, பெப். 01

சுதந்திர தின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், இரு மொழிகளிலும் தேசிய கீதம் இசைக்கப்படும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் அறிவித்துள்ளது.

77 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

உள்நாட்டலுவல்கள், மாகாணசபை பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைத் தளபதிகள், பதில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்டோர் குறித்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் தொகுப்பு வருமாறு-முப்படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு படை என சுதந்திர தின அணி வகுப்பில் மொத்தமாக 4,421 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இராஜதந்திரிகளுக்கு வழமைபோல் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்க்கட்சி தலைவர்கள் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தின நிகழ்வுகளுக்காக 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படும். (அ)

## அதிகம் பாவனையிலுள்ள வாகன வகைகளை நாட்டுக்கு மீண்டும் இறக்குமதி செய்யமுடியாது

கொழும்பு, பெப். 01

நாட்டில் பயன்படுத்தப்படும் பிரபலமான வாகன வகைகளை மீண்டும் நாட்டுக்கு இறக்குமதி செய்ய முடியாது என்று ஜப்பான் - இலங்கை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் சுமார் 3 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு உரிய நிலையில் உள்ள வாகனங்களை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கான அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளதாக ஜப்பான் - இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவர் ஜகத் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, டொயோட்டா அக்வா, டொயோட்டா அக்ஸ் சியோ, டொயோட்டா பிரீமியோ, டொயோட்டா பியஸ் மற்றும் டொயோட்டா எலியோன், டொயோட்டா விட்ஸ் ஆகிய வாகனங்களை இந்த முறைமையின் கீழ் இறக்குமதி செய்ய முடியாது என அவர் குறிப்பிட்டார்.

நான்கு வகை வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் அனுமதி வழங்கியுள்ளபோதிலும் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை. (அ)

## மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, பெப். 01

மலையகத்திற்கான ரயில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கொட்டகலை மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக மலையகத்திற்கான ரயில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மண்மேட்டை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் அமைப்பின் நோக்கம் இன்றும் தேசிய, சர்வதேச மட்டத்தில் வியாபிப்பு

## சுட்டிக்காட்டுகிறார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, பெப். 01

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லா தொழிக்கப்பட்டாலும் அந்த அமைப்பின் நோக்கம் இன்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வியாபித்துள்ளது. காலி முகத்திடல் அரகலய பூமியில் புலிகளின் இலக்கு வெளிப்பட்டது. ஆகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.**



மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்-என்றார். (அ)

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சந்தையில் நிலவும் அரிசி மற்றும் தேங்காய் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கம் வெகுவிரைவில் தீர்வு காணவேண்டும். நாட்டு மக்கள் முதலில் உண்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். மொத்த நுகர்வுக்கு தேவையான அளவில் தேசிய மட்டத்தில் தேங்காய் உற்பத்தி செய்யப்படுவதில்லை.

பெரும்பாலான தென்னந் தோப்புகள் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பின்னணியில் எவ்வாறு அதிகளவான தெங்கு விளைச்சலை எதிர்பார்க்க முடியும். ஆகவே தேங்காய் தட்டுப்பாட்டுக்கு மனித காரணிகளுடன் பௌதீக காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் பற்றி தற்போது பேசப்படுகிறது. ஓய்வு பெற்ற ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அரச உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அந்த வீடுகளை அவர்கள் தமது விருப்பத்துக்கு அமைய பெருப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள விஜேராம இல்லத்தை அவர்கள் அரச செலவில் தமது விருப்பத்துக்கு அமைய புதுப்பித்துள்ளார்கள். நாடு வங்குரோத்து நிலையடைந்த சந்தர்ப்பத்திலும் அந்த வீட்டை புனரமைப்பதற்கு பல மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ஆகவே இது முறையற்றதொரு செயற்பாடாகும்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த 30 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தார். விடுதலைப் புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டிருந்தாலும் அந்த அமைப்பின் நோக்கம் இன்றும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் வியாபித்துள்ளது. கொழும்பு காலி முகத்திடல் போராட்டக்களத்தில் விடுதலைப் புலிகளின் இலக்கு வெளிப்பட்டது. ஆகவே முன்னாள் ஜனாதிபதி

# கான்ஸ்டபிள் பணிநீக்கம்!

கொழும்பு, பெப். 01

இரத்மலானை பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்தியதோடு, ஓட்டோ மீது மோதிவிட்டு தப்பிச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விபத்தில் சிக்கிய பொலிஸ் ஜீப்பும் ஓட்டோவும் விபத்துக்குள்ளாகும் காட்சியும், பின்னர் ஜீப் நிற்காமல் தொடர்ந்து செல்வதை காட்டும் காணொளியொன்று சமீபத்தில் சமூக ஊடகங்களில் பரவியது.

இந்தச் சம்பவம் 28 ஆம் திகதி இரத்மலானைப் பகுதியில் இடம்பெற்றதாகவும், அதே நாளில் கல்கிஸை பொலிஸார் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி ஜீப் வாகனத்தை செலுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கைது செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது அவர் மது போதையில் வாகனம் செலுத்தியது உறுதி செய்யப் பட்டதோடு, சந்தேக நபர் கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பாக கல்கிஸை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள ஜப்பான் நிறுவனங்களுடன் அமைச்சர் விஜித கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 01

ஜப்பானில் இருந்துவரும் தொழில் வாய்ப்புக்களை இலங்கைக்கு பெற்றுக்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று வெளிவிவகார, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் ஜப்பானின் சர்வதேச ஆளணி வழங்குனர் அமைப்பான ஐ.எம் ஜப்பான் நிறுவனத்தின் தலைவர் கனமொரி ஹதோஷி உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் விஜித ஹேரத், ஜப்பானில் இருக்கும் தொழில் வாய்ப்புக்களுக்காக தகுதியுள்ள தொழிலாளர்களை இணைத்துக்கொள்வதை அதிகரித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். அத்துன் எதிர்வரும் காலங்களில் விசேடமாக ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் தொழிலுக்காக எமது நாட்டு தொழில் படையணியை பயிற்றுவிப்பதற்காக குறிதத அமைச்சு மற்றும் அரச தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதை மிகவும் விணைத்திரனுடன் மேற்கொள்வதுடன் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுடன் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் செயற்திறனான பங்களிப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

ஜப்பானில் தொழில் வாய்ப்புக்காக இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் செவிலியர் சேவை மற்றும் கட்டுமான தொழில் வாய்ப்புக்கள் பல இருக்கின்றன அதற்காக இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதாக ஐ.எம் ஜப்பான் நிறுவனத்தின் தலைவர் இதன் போது தெரிவித்தார். எதிர்வரும் காலங்களில் வாகன சாரதி உள்ளிட்ட மேலும் பல தொழில் வாய்ப்புக்களை இலங்கையர்களுக்காக திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் திறமையான இலங்கை பணியாளர்களை உருவாக்குவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகளை பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# சமூக ஊடகங்களின் பயன்பாட்டால் சிறுவர் தற்கொலைகள் அதிகரிப்பு!

கொழும்பு, பெப்.01

சமூக ஊடகங்களின் பயன்பாடு சிறுவர் தற்கொலைகள் அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளதாக இலங்கை சிவில் வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டில் 200 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் தற்கொலை செய்துகொண்டுள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அதன் தலைவர் விசேட மருத்துவர் கபில ஜயரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-2022 ஆம் ஆண்டில், 18 வயதுக்குட்பட்ட 133 சிறுவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

அதிகாரப்பூர் வமற்ற தரவுகளின்படி, கடந்த ஆண்டு 270 சிறுவர்கள் தற் கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் பல்வேறு காரணங்கள் உள்ளன.

சமூக ஊட கங்களை தடை செய்வதே இவற்றை தடுக்க எம்மால் இயன்ற முதலாவது செயற்பாடாகும். ஒரு நாடாக என்ன செய்ய வேண்டும் என்பது குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வாரம் அல்லது இரண்டு வாரங்களில் இது குறித்த தகவல்களை வெளி யிட எதிர்பார்க்கிறோம்.

குழந் தைகளுக்காக சமூக ஊடகங் களைப் பயன்படுத்துவதில் நன் மைகள் மற்றும் தீமைகள் இரண்டும் உள்ளன. இதை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது குறித்த பரிந்துரைகளை வழங்கலாம் என எதிர்பார்க்கி றோம்-என்றார். (அ)

# சு.க. பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துவிட்டது

## கூறுகிறார் லசந்த அழகியவண்ண

கொழும்பு, பெப். 01

சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளரை ஏற்றுக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதற்கமைய கட்சியிலிருந்த சகல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளதாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உள்ளூராட்சிமன்றத் தேர்தல் உட்பட எதிர்வரும் சகல தேர்தல்களிலும் சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி கதிரைச் சின்னத்தில் போட்டியிடும். இந்த கூட்டணிக்கு தலைமைத்துவ சபையொன்று காணப்படுகிறது. அதன் தலைவராக அநுரபிரியதர்ஷன யாப்பாவும், செயலாளராக நானும் செயற்படுகின்றோம்.

சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளரை ஏற்றுக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதற்கமைய கட்சியிலிருந்த சகல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளது. 95 வீதமானோர் மீண்டும் எம்முடன் இணைந்துள்ளனர்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் எம்.பிக்கள் 30 பேர் எம்முடன் இணைந்துள்ளனர். வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்று மக்கள் அதிருப்தியை வெளியிட்டு வருகின்ற நிலையில், அமைச்சர்கள் எவ்வித பிரச்னையும் இல்லை எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு கடந்த அரசாங்கமே காரணம் என்கின்றனர். ஆனால் நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து தாமே மீட்டதாகக் குறிப்பிடுகின்றனர். பொருளாதார நெருக்கடிகள் தீர்க்கப்பட்டு தான் நாடு தேசிய மக்கள் சக்தியிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இவர்களுக்கு அதனை முன்னெடுத்துச் செல்வதே சிக்கலாகவுள்ளது. மக்களுக்கு இந்த யதார்த்தம் புரிய ஆரம்பித்துள்ளது-என்றார். (அ)

# மதுபானம் அருந்திக்கொண்டு இருந்த மூவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழப்பு!

## காலி ஹினிதும பிரதேசத்தில்

கொழும்பு, பெப். 01

காலி, ஹினிதும, பனங்கல பிரதேசத்தில் ,டம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த மூவரும் மதுபானம் அருந்திக் கொண்டு இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்களில் இருவர் 29 மற்றும் 54 வயதுடையவர்கள் என்பதோடு, மற்றையவரின் வயது உறுதிப்படுத்தப்படவில்லை.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை ஹினிதும பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# “மக்கள் உரிய தகவல் வழங்கினால் குற்றச்செயல்களை ஒழிக்கமுடியும்”

கல்முனை, பெப். 01

**போதைப்பொருள் பாவனை, வீடு உடைப்பு உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் உரிய தகவல்கள் மக்கள் ஊடாக சரியாக கிடைக்கப்பெற்றால் அவ்வாறான பிரச்னைகளை உடனடியாக எம்மால் தீர்க்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**



இன நல்லிணக்கம், பொது மக்கள் தொடர்பாடல், போதைப்பொருள் ஒழிப்பு உள்ளிட்ட செயல்பாடுகளை சிறப்பாக மேற்கொண்டமைக்காக அம்பாறை மாவட்டம் கல்முனை பிராந்தியத்துக்கான புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகராகபொறுப்பேற்ற உதுமாலெவ்வை மஹ்மூத்கான் இப்னு அசாருக்கு கல்முனை தலைமையக பொலிஸ் ஆலோசனை குழுவின் பொதுச் செயலாளர் எம். ஐ. எம். ஜிப்ரி உள்ளிட்ட பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்களால் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றதுடன் புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகருடன் பொலிஸ் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு கருத்து தெரிவித்த புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகர், “எமது பதில் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனை மற்றும் வழிநடத்தலுக்கமைய ஒவ்வொரு பொலிஸ் நிலையத்தில் உள்ள சமூக பொலிஸ் பிரிவுடன் ஆலோசனைக்குழுக்கள் இணைக்கப்பட்டுள்ளன. இது தவிர கல்முனை பிராந்தியத்தில் போதைப்பொருள் பாவனை, வீடு உடைப்பு உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் உரிய தகவல்கள் மக்கள் ஊடாக சரியாக கிடைக்கப்பெற்றால் அவ்வாறான பிரச்னைகளை உடனடியாக எம்மால் தீர்க்க முடியும். பொலிஸ் ஆலோசனை குழு கூட்டங்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் கீழ் நடைபெற வேண்டும். இவ்வாறான குழுக்கள் ஊடாக பல்வேறு செயல்திட்டங்களை பொலிஸ் நிலையம் முன்னெடுத்துள்ளது.

கல்முனை பிராந் தியத்தில் உள்ள சகல மக்களுக் கும் பணியாற்ற ஆவலாக வந்திருக்கின்றேன். அத்துடன் கல்முனை சமூக பொலிஸ் பிரிவுடன் இணைந்து ஆலோசனை குழு சரியான வினைத்திறனுடன் இயங்குவதை தற்போது என்னால் காண முடிகின்றது. எனவே, பல்வேறு செயல்திட்டங்களை இக்குழுவின் ஊடாக முன்னெடுக்க முடியும் என நம்புகின்றேன்” - என்றார்.

இந்த நிகழ்வில் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி எம். றம்ஸீன் பக்கீர் உட்பட சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ. எல்.ஏ.வாஹிட் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (எ)

# மாடி கட்டடம் அமைப்பது குறித்து பாடசாலையில் கலந்துரையாடல்



திருகோணமலை, பெப்.01

கிண்ணியா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் மூன்று மாடிக் கட்டடம் அமைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, தேசிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரதேச இணைப்பாளர் எம். இ. எம். ராபிக், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

பாடசாலைக்கு மூன்று மாடிக் கட்டடம் அமைத்தல் தொடர்பான முன்னெடுப்பில் ஏற்பட்ட தாமதத்துக்கான காரணங்கள் குறித்து இங்கு ஆராயப்பட்டன.

அத்தோடு, கட்டடம் அமைக்க பொருத்த மான இடங்களையும் பிரதி அமைச்சர் பார்வையிட்டார். (எ)

# ”புதியவர்களின் நாள்” விழா

சாய்ந்தமருது, பெப்.01

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா ”புதியவர்களின் நாள்” எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் புதிய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எம். ஐ. எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையின் கண் மருத்துவர் நஸ்ரின் சாஜிதா கமால் நிஸாத் பிரதம விருந்தி னராக கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ)

# மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு



திருகோணமலை, பெப்.01

திருகோணமலையில் 200 வருடங்கள் பழமை வாய்ந்த விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் தரம் -1 இற்கு மாணவர்களை வரவேற்கும் நிகழ்வும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நடைபெற்றன.பாடசாலை அதிபர் திருமதி சனில் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தரம் - 1 மாணவர்கள் மாலைகள் அணிவிக்கப்பட்டு வரவேற் கப்பட்டனர்(எ)

# மத்ரஸா மாணவர்களுக்கு குர்ஆன் வழங்கும் நிகழ்வு

கல்முனை, பெப்.01

மத்ரஸா மாணவர்களுக்கு இலவசமாக குர்ஆன் பிரதிகளை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் கல்முனை தாறுஸ்ஸபா தலை மையகத்தில் உஸ்தாத் சபா முஹம்மத் நஜாஹி தலை மையில் நடை பெற்றது.

தாறுஸ்ஸபா அமையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல் முனை பிரதேச பதில் பிரதேச செயலாளர் ரி. எம். எம். அன்சார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.



அத்தோடு, கல்முனை பிரதேச செயலக சமுக சேவைகள் அதிகாரி எம்.எம்.எம். ஜெய்சான், கல்முனைக் குடி 09 பிரிவு கிராம உத்தியோ கத்தர் எம். ஏ. றஹ்னா, அபிவி ருத்தி உத்தியோகத்தர் ஏ. றிப்கா ஜெஸ்மின் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டது டன் மாணவர்களுக்கான குர்ஆன் பிரதிகளையும் வழங்கி வைத்தனர்.

# தொழில் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்னைக்கு தீர்வுகாண நடவடிக்கை

திருகோணமலை, பெப்.01

கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையில் திருகோணமலை மாவட்ட செயலாளர் ஜி. எம். ஹேமந்த குமாரவின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழில் துறையினருக்கான கலந்துரையாடல் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

தொழில் துறையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்பை அதிகரிப்பது, கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

அந்த வகையில் கைத்தொழில் துறையில் உள்ள முக்கிய பிரச்னைகளை அடையாளம் காணும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தொழில் துறையினர் எதிர்கொள்ளும் பிரச்னைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டன. தொழில் துறையினரால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உரிய பதிலும் வழங்கப்பட்டது.

இதன்போது, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான அருண் ஹேமச்சந்திரா, பாராளுமன்ற உறுப்பினர் அக்மீமன கமகே ரொஷான் பிரிய சஞ்சன, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை மேலதிக செயலாளர் மற்றும் பணிப்பாளர் உட்பட தொழில் துறையினர் பலரும் கலந்து கொண்டனர்.

# விசேட தேவையுடையோருக்கான விளையாட்டு விழா திருமலையில்

திருகோணமலை, பெப். 01

திருகோணமலை மாவட்ட விசேட தேவையுடை யோருக்கான வருடாந்த விளையாட்டு விழா நேற்று முன்தினம் திருகோணமலை இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட சமூக சேவை திணைக்களம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது, 64 விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் இதில் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் தேசிய மட்ட விளையாட்டு விழாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாக சமூக சேவைகள்



திணைக்கள மாவட்ட இணைப்பாளர் த. பிரணவன் தெரிவித்தார்.இந்த நிகழ்வை திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் ஆரம்பித்து வைத்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகொப்டர் - விமானம் நேருக்கு நேர் மோதி விபத்து

## அமெரிக்காவில் 67 பேர் உயிரிழப்பு

வாஷிங்டன், பெப். 01

**அமெரிக்காவில் நடுவானில் இராணுவ ஹெலிகொப்டர், பயணிகள் விமானம் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் சிக்கி 67 பேர் உயிரிழந்தனர்.**



அமெரிக்காவின் கன்சஸ் மாகாணம் விஷிதா நகரிலிருந்து 60 பயணிகள், 4 ஊழியர்கள் என மொத்தம் 64 பேருடன் வாஷிங்டன் மாகாணத்துக்கு அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் காலை புறப்பட்டது.

இந்த விமானம் வாஷிங்டனில் உள்ள ரொனால்ட் ரீகன் விமான நிலையத்தில் தரையிறங்க நெருங்கிக்கொண்டிருந்தது. அதே நேரத்தில் அமெரிக்க இராணுவத்துக்குச் சொந்தமான பிளாக் ஹாக் ஹெலிகொப்டர் ரொனால்ட் ரீகன் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது. ஹெலிகொப்டரில் 3 இராணுவத்தினர் பயணித்தனர்.

இந்த நிலையில், தரையிறங்க முன்ற பயணிகள் விமானமும் இராணுவ ஹெலிகொப்டரும் நடுவானில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான ஹெலிகொப்டரும், விமானமும் போடோமாக் ஆற்றில் விழுந்தது. தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர்.

ஆனால், இந்த கோர விபத்தில் பயணிகள் விமானத்தில் பயணித்த 64 பேர், ஹெலிகொப்டரில் பயணித்த 3 பேர் என மொத்தம் 67 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் 28 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. எஞ்சியோரின் உடல்களை தேடும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

அதே வேளை, விமானத்தின் கறுப்புப் பெட்டியை அதிகாரிகள் கைப் பற்றியுள்ளனர். கறுப்புப் பெட் டியை முழுமையாக ஆய்வு செய்த பின்னரே இந்த விபத் துக்கான காரணம் குறித்து தெரியவரும்.(எ)

# ஜப்பானில் பொது இடத்தில் புகைபிடிக்க தடை விதிப்பு

ரோக்கியோ, பெப்.01

ஜப்பானில் பொது இடங்களில் புகைபிடிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் உலக புகழ்பெற்ற கண்காட்சிகளில் ஒன்றாக எக்ஸ்போ கண்காட்சி விளங்குகிறது. இந்த நிலையில், ஜப்பானின் ஒசாகா நகரில் உலக எக்ஸ்போ கண்காட்சி - 2025 நடைபெறுகிறது. இதில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்டு அரங்குகளை அமைத்து தங்கள் நாட்டின் பாரம்பரியம் மற்றும் பண் பாட்டை காட்சிப்படுத்த உள்ளன.

இதனை முன்னிட்டு ஒசாகாவில் பொது இடங்களில் சிகரெட், இ - சிகரெட் உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தி புகைபிடிக்க அந்த நகர மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உத்தரவை மீறுவோருக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கொங்கோவில் வன்முறை 17 பேர் பலி!

கின்சாசா, பெப். 01

ஆபிரிக்க நாடான கொங்கோவில் வெடித்த வன்முறையால் 17 பேர் பலியாகினர். கிழக்கு ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் பொதுமக்களை குறிவைத்து எம் - 23 என்ற கிளர்ச்சி குழு அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் வன்முறையில் சிக்கி சிகிச்சை பெற்று வந்த 4 பேர் உயிரிழந்தனர். இதனால் அந்த நாட்டில் வன்முறைக்கு பலியானோர் எண்ணிக்கை 17 ஆக அதிகரித்தது. (எ)

# முன்னாள் ஜனாதிபதியின் மகள் பயங்கரவாத குற்றச்சாட்டில் கைது

ஜொகன்னஸ்பேர்க், பெப்.01

தென் ஆபிரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி ஜேக்கப் ஜூமாவின் மகள் பயங்கரவாத குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் ஜேக்கப் ஜூமா. இவருக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை தொடர்ந்து பதவியிலிருந்து விலகும்படி அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு ஊழல் விசாரணைக்கு ஆஜராகும்படி ஜேக்கப்புக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், அதனை அவர் ஏற்க மறுத்ததும், கைது செய்யப்பட்டு சிறைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

இதனால், அவருடைய ஆதரவாளர்கள் வன்முறையில்




இறங்கினர். கடைகளை சூறையாடினர். கட்டடங்கள், வீடுகளுக்குத் தீ வைத்து சொத்துகளை சேதப்படுத்தினர். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர்.

அப்போது, ஜேக்கப்பின் மகள் டுடுஜைல் ஜூமா-சம்புத்லா டுவிட்டரில் (தற்போது எக்ஸ் வலைத்தளம்) வன்முறையாளர்களை தூண்டி விட்டார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

நாடு முழுவதும் பரவிய வன்முறையின்போது, அதனை ஊக்குவிக்கும் வகையில், இன்னும் கூடுதலாக சேதம் ஏற்படுத்தும்படி, போராட்டக்காரர்களை சம்புத்லா தூண்டி விட்டார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இதில், 350இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஜேக்கப்புக்கும் சிறில் ரமபோசாவுக்கும் இடையே அரசியல் மோதல் போக்கு நிலவியது. ஜேக்கப்புக்கு பதிலாக ரமபோசா நாட்டின் ஜனாதிபதியானார். ஜேக்கப் கட்சியை வீட்டு நீக்கப்பட்டதும், எம். கே. என்ற புதிய கட்சியை தொடங்கினார். சம்புத்லா அக்கட்சியில் முக்கிய உறுப்பினராக இருக்கிறார். பாராளுமன்ற உறுப்பினராகவும் அவர் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.இந்த நிலையிலேயே சம் புத்லா, பயங்கரவாத குற்றச் சாட்டுகளின் கீழ் கைது செய் யப்பட்டு உள்ளார்.(எ)

# உக்ரைனில் கட்டடம்மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

## குழந்தை உட்பட நால்வர் பலி

கீவ், பெப்.01

உக்ரைனில் அடுக்குமாடி கட்டடம்மீதுரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில்,ஒரு குழந்தை உட்பட நால்வர் உயிரிழந்தனர்.ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனின் பல்வேறு பகுதிகளை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியது. அதே சமயம், மேற்கத்திய நாடுகளின் இராணுவ மற்றும் பொருளாதார உதவியுடன் போரை உக்ரைன் எதிர் கொண்டு வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் பெரிய நகரமான சுமியில் ரஷ்யா ட்ரோன் மூலம் நேற்று தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் அப்பகுதியில் உள்ள ஓர் அடுக்குமாடி குடியிருப்பு சேதம் அடைந்தது. அத்தோடு, இந்தத் தாக்குதலில் ஒரு குழந்தை உட்பட 4 பேர் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர்.

இதனால் அந்த குடியிருப்பில் வசித்திருந்த 120 பேர் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்.

இதேபோன்று, உக்ரைனின் தெற்கு ஒடேசா பகுதியில், ரஷ்யா ட்ரோன்கள் ஒரு மருத்துவமனை மற்றும் இரண்டு அடுக்குமாடி கட்டடங்களை சேதப் படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இரவு நேரங்களில் ரஷ்யா ஏவிய 80இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை உக்ரைன் இராணுவம் சுட்டு வீழ்த்தியது. (எ)

# புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான 30 சதவீத இலக்கை அடைவோம்

## இஸ்ரேல் அரசாங்கம் நம்பிக்கை

டெல் அவிவ், பெப்.01

இஸ்ரேலில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதனால், கார்பன் வெளிப்பாடு குறைவுடன், காற்று மாசுபாடு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான 30 சதவீத இலக்கை 2030ஆம் ஆண்டுக்குள் அடைவதற்கான செயல் திட்டம் வகுக்கப்பட்டு உள்ளது என அந்த நாட்டு ஆற்றல் மற்றும் உட்கட்டமைப்பு துறைக்கான அமைச்சர் கூறியுள்ளார்.

இவற்றில் இலக்கை அடைவதற்கான 88 சதவீத நடவடிக்கைகள் முன்பே அமுல்படுத்தப்பட்டு விட்டன.

இஸ்ரேலின் பாதுகாப்புக்கு இந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முக்கிய பங்கு வகிக்கும்.

2035ஆம் ஆண்டுக்கான புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான விரிவானதொரு செயல் திட்டம் வகுப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை பற்றிய விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை இந்தியாவுக்கு தொடர்பில்லை

## கனடா விசாரணை ஆணைக்குழு அறிக்கை

ஒட்டாவா, பெப்.01

ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பில்லை என்று கனடா விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கனடாவில் வசித்து வந்த காலிஸ்தான் அமைப்பின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கடந்த 2023ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். இந்தக் கொலையுடன் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டினார். இதை இந்தியா திட்டவட்டமாக மறுத்தது. இவ்விவகாரத்தால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. நிஜ்ஜார் கொலை மற்றும் கனடா தேர்தல்களில் வெளிநாடுகளின் தலையீடுகள் தொடர்பில் விசாரணை நடத்த கனடா அரசு ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. அந்த ஆணைக்குழு விசாரணை நடத்தி தனது அறிக்கையை தாக்கல் செய்தது. 123 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்



கையில் பல்வேறு தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் நிஜ்ஜார் கொலையில் வெளிநாட்டு சக்திகளுக்கு தொடர்பு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதே நேரத்தில் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவின் தொடர்பு இருப்பதாக பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறியதைத் தொடர்ந்து சிலர் நாட்டில் திட்டமிட்டு தவறான தகவல்களை பரப்பினர். இது குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தவறானவை என்று கனடா ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 654 ஓட்டங்கள் குவித்தது ஆஸி. இலங்கை அணி தடுமாற்றம்!

காலி, பெப்.01

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 654 ஓட்டங்கள் குவித்தது அவுஸ் திரேலிய அணி. இதேவேளை, 136 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்கள் இழந்த நிலையில் இலங்கை அணி தடு மாறி வருகிறது.

இலங்கைக்கு வந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி, முதல் போட்டி காலி யில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 654 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இலங்கை தரப்பில் பிரபாத் ஜெயசூர்யா மற்றும் ஜெப்ரி வண்டர்சே தலா 3 விக்கெட்கள் வீழ்த்தினர்.

பின்னர் முதல் இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி 5 விக்கெட்களை இழந்து 136 ஓட்டங்களை பெற் றுள்ளது. இன்னும் 518 ஓட்டங்கள் பின்தங்கிய நிலை யில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடி வருகிறது.(எ)

## சம்பியன்ஸ் கிண்ண படப்பிடிப்பு இரத்து?

டுபாய், பெப்.01

ஒன்பதாவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக் கெட் தொடர் பெப்ரவரி 19ஆம் திகதி முதல் மார்ச் 9ஆம் திகதி வரை பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெறுகிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணி பாகிஸ் தானுக்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய போட்டிகள் மாத்திரம் டுபாய்க்கு மாற்றப்பட்டுள்ளன.

மொத்தம் 8 அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக் கப்பட்டு சம்பியன்ஸ் கிண்ண தொடரில் விளையாட வுள்ளன.

இந்த நிலையில், சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் தொடங்கும் முன்பு இதில் பங்கேற்கும் அணிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் படப்பிடிப்பு நடைமு றையை ஐ. சி. சி. இரத்து செய்துள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

முன்னதாக இந்தப் படப்பிடிப்பில் பங்கேற்க இந்திய அணித்தலைவர் ரோஹித் சர்மா பாகிஸ்தானுக்கு செல்ல மாட்டார் என்று தகவல்கள் வெளியாகின.இந்த நிலை யில், படப்பிடிப்பு நிகழ்ச்சியை ஐ. சி. சி. இரத்து செய்து விட்டதாக கூறப்படுகிறது.

படப்பிடிப்பு இரத்துச் செய் யப்பட்ட நிலையில், சம்பியன்ஸ் கிண்ண தொடக்க விழா இந்த தொடரின் முதல் போட்டிக்கு மூன்று நாட் களுக்கு முன்னதாகவே நடைபெறும் என்றும் தெரிய வருகிறது.

(எ)

## மைதானத்துக்குள் நுழைந்து கோலி ரசிகர் செய்த செயல்


புதுடில்லி, பெப்.01

90ஆவது ரஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தி யாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இதில் ஓர் ஆட்டத்தில் டில்லி - ரயில்வே அணிகள் மோதின. டில்லி அணிக்காக 12 ஆண்டுகளுக்கு பிறகு நட்சத்திர வீரர் விராட் கோலி களமிறக்கியுள்ளார்.

முன்னதாக இந்த ஆட்டத்தில் டில்லி அணி களத்தடுப்பின்போது விராட் கோலி ரசிகர் ஒருவர் மைதானத்துக்குள் அத்துமீறி நுழைந்தார். அவர் விராட் கோலியை நோக்கி ஓடி அவரது காலில் விழுந்து வணங்கினார். உடனே அவரை விரட்டி சென்ற பாது காவலர்கள் தூக்கி நிறுத்தினர். விராட் கோலி, பாதுகா வலர்களிடம் அவரை ஒன்றும் செய்யாமல் பத்திரமாக அழைத்து செல்லுமாறு கூறினார்.

விராட் கோலி ரசிகரின் இந்த செயல் இணையத்தில் வைரலாகி வருகிறது. (எ)



# அறிமுக டெஸ்ட் போட்டியில் அதிவேக சதமடித்த இங்லிஸ்


காலி, பெப்.01

அறிமுக டெஸ்ட் போட்டியிலேயே அதிவேக சதம டித்த 2ஆவது வீரராக மாபெரும் சாதனை படைத்துள் ளார் ஜோஷ் இங்லிஸ்.

இலங்கைக்கு வந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதன்படி, முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் கடந்த 29 ஆம் திகதி தொடங்கியது. இதில், அவுஸ்திரேலிய அணியில் அறிமுக வீரராக ஜோஷ் இங்லிஸ் இடம் பெற்றார்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் அதிகபட் சமாக கவாஜா 232 ஓட்டங்களும், ஸ்டீவ் சுமித் 141 ஓட் டங்களும், அறிமுக வீரர் ஜோஷ் இங்லிஸ் 102 ஓட்டங் களும் அடித்தனர்.

இந்த போட்டியில் அறிமுக வீரராக களமிறங்கிய ஜோஷ் இங்லிஸ் வெறும் 90 பந்துகளில் தனது முதல் டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் அறிமுகமான போட்டியிலேயே அதிவேக சதம் அடித்த 2ஆவது வீரர் என்ற மாபெரும் சாதனையை படைத்துள்ளார். இதில், இந்திய முன்னாள் வீரர் ஷிகர் தவான் 85 பந்துகளில் சதமடித்து முதலிடத் தில் உள்ளார்.



அந்த பட்டியல் வருமாறு, 1. ஷிகர் தவான் - 85 பந்து கள், 2. ஜோஷ் இங்லிஸ் - 90 பந்துகள், 3. வெய்ன் சுமித் - 93 பந்துகள், 4. பிரித்வி ஷா - 99 பந்துகள் (எ)

## அரையிறுதியில் நான்கு அணிகள்

கோலாலம்பூர்,

ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிக்கு இந்தியா உள்ளிட்ட நான்கு அணிகள் முன்னேறியுள்ளன.

இந்தத் தொடர் மலேசியாவில் நடைபெற்று வரு கிறது. இதில் லீக் மற்றும் சுப்பர் 6 சுற்று ஆட்டங்களின் முடிவில் இந்தியா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

அரையிறுதி சுற்று கோலாலம்பூரில் நேற்றுத் தொடங்கியது. அரையிறுதி ஆட்டங்களில் தென் ஆபிரிக்கா- அவுஸ்திரேலியா, இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன.

அரையிறுதி சுற்று முழு விவரம் பின்வருமாறு,

முதல் அரையிறுதி: தென் ஆபிரிக்கா - அவுஸ்தி ரேலியா, 2ஆவது அரையிறுதி: இந்தியா - இங்கி லாந்து.

இந்தத் தொடரில் இந்திய அணி தோல்வியை சந்திக்காமல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது. (எ)

## சென்னையை வீழ்த்தி கேரளா அணி வெற்றி



சென்னை, பெப்.01

13 அணிகள் பங்கேற்றுள்ள 11ஆவது இந்தியன் சுப்பர் லீக் (ஐ. எஸ். எல்.) உதைபந்தாட்ட தொடர் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் சென்னை நேரு மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த லீக் ஆட்டத்தில் முன்னாள் சம்பியன் சென்னையின் எப். சி. அணி, கேரளா பிளாஸ்டர்ஸ் அணியுடன் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் சென் னையின் எப். சி. அணி 1 - 3 என்ற கோல் கணக்கில் கேரளா பிளாஸ்டர்ஸிடம் தோல்வியடைந்தது. சென்னை அணியை அதன் சொந்த மண்ணில் கேரளா வீழ்த்துவது இதுவே முதல்முறையாகும். இது நடப்பு சீசனில் சென்னை அணி சந்தித்த 9ஆவது தோல்வியா கும். (எ)

## நாட்டுக்காக பணி செய்ய நான் தயாராக உள்ளேன்

### வருண் சக்கரவர்த்தி தெரிவிப்பு



ராஜ்கோட், பெப்.01

நான் 4 ஓவர்களை கூட ஒன்றாக வீசியுள்ளேன். எனவே, எனக்கு கொடுக்கப்படும் பணியை நாட்டுக்காக செய்வதற்கு தயாராக உள்ளேன் என்று வருண் சக்கர வர்த்தி தெரிவித்தார்.

ராஜ்கோட்டில் நடந்த இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் இந்திய தரப்பில் வருண் சக்கரவர்த்தி 4 ஓவர்களில் 24 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட் களை அள்ளினார்.

இருப்பினும், இங்கிலாந்து 26 ஓட்டங்கள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி தோல்வியைத் தழுவியிருந்தாலும் பந்துவீச்சில் 5 விக்கெட்கள் வீழ்த்தி அசத்திய வருண் சக்கரவர்த்தி ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட் டார்.இந்த நிலையில் போட்டி முடிந்து வருண் சக்கரவர்த்தி வழங்கிய பேட்டியில், "இந்த போட்டியில் நாங்கள் வெற்றி பெறாதது சோகம்தான். ஆனால், இதுதான் கிரிக்கெட்டின் இயற்கை.

இங்கிருந்து நகர்ந்து அடுத்த போட்டிக்கு தயாராக வேண்டும். நாட்டுக்காக விளையாடும்போது நீங்கள் பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். அதை என்னால் தொடர்ச்சியாக செய்ய முடிகிறது.

பலமுறை நான் 4 ஓவர்களை கூட ஒன்றாக வீசியுள்ளேன். எனவே, எனக்கு கொடுக்கப்படும் வேலையை நாட்டுக்காக செய்வதற்கு தயாராக உள்ளேன்.

என்னை பொறுத்தவரை, என்னால் என்ன செய்ய முடியும், அணிக்காக எத்தகைய பங்களிப்பை வழங்க முடியும் என்பதில் கவனம் செலுத்துவது மட்டுமே எனது பணி"- என்று கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்களை ஒன்றிணைக்கவே...

வைத்து தெரிவித்தார் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க.

யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி வல்வெட்டித்துறை பிரதேசத்தில் நேற்று நண்பகல் சிநேகபூர்வ சந்திப்புக்களில் பங்கேற்றார்

அங்கு உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த பொதுத் தேர்தலில் எம் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நான் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வாக்குகள் என்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைப்பதற்கான வாக்குகளாக மட்டும் கருதப்படவில்லை.

இந்த வாக்குகள் என்பன அனைத்து மக்களையும் ஒன்றிணைப்பதற்கான வாக்குகளாகவே நாம் பார்க்கிறோம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மலையகம் என அனைத்து மக்களின் அங்கீகாரத்தையும் பெற்ற இலங்கையின் முதலாவது அரசாங்கமாக எமது அரசாங்கம் தான் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் இருந்த அரசாங்கங்கள், வடக்குக்கு தனியான அரசியலையும், கிழக்கு தனியானதொரு அரசியலையும் தெற்கிற்கு தனியானதொரு அரசியலையும்தான் செய்தார்கள்.

இவர்கள் நாட்டு மக்களை பிரிக்கும் அரசியலில்தான் ஈடுபட்டார்கள்.

எவ்வளவு தூரத்திற்கு இவர்கள் மக்களை பிரித்தார்கள் என்றால், யுத்தமொன்று ஏற்படும்வரை பிரித்தார்கள்.

இதனால்தான் எமது பரம்பரை யுத்தம் செய்தது. சந்தேகம், முரண்பாடுகளுடன்தான் அந்தப் பரம்பரை வாழ்ந்தது. இந்த நிலைமை மீண்டும் வேண்டுமா? நாம் பிரிய வேண்டுமா?

மக்களை பிரிப்பதற்கு பதிலாக மக்களை இணைக்கும் அரசியலை இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நாம் மேற்கொண்டுள்ளோம்.

இதற்கு முன்னர் இந்தப் பிரதேசத்துக்கு ஜனாதிபதி உள்ளிட்ட எந்தவொரு அரசியல் தலைவரும் வருகைத் தந்துள்ளார்களா? - இல்லை.

நாம் மக்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதால்தான், வல்வெட்டித்துறைக்கு வருகை தந்துள்ளோம். நாம் இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்தவேண்டும்.

நான் இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் புதியதொரு விடயத்தை கொண்டுவரவுள்ளேன். ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.

ஆனால், அனைத்து மக்களும் கொண்டாடும் ஒரு பண்டிகை எமக்கு வேண்டாமா? அதற்காகத்தான் அனைத்து மக்களின் கலாசாரம், உணவு, உடை, பண்பாட்டை பரிமாற்றிக் கொள்ள ஒரு விசேட தினத்தை ஒக்ரோபரில் நடத்த தீர்மானித் துள்ளோம்.

எமது நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும் என் பதுதான் கடந்த தேர்தல்களில் மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது.

மக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடித்தார்கள். இதனை நாம்தான் நிறுத்தியுள்ளோம்.

காங்கேசன்துறை பகுதியில் ஜனாதிபதி மாளிகையொன்று உள்ளது. இங்கே ஒரு ஜனாதிபதி மாளிகை தேவையா?

எனக்கு இந்த மாளிகை தேவையில்லை. இதுதொடர்பாக நான் ஆளுநரிடமும் மாவட்ட செயலாளருக்கும் ஒரு விடயத்தை நான் கூறினேன்.

இந்த மாளிகையை எப்படி பயன்படுத்தலாம் என்பது தொடர்பான திட்டத்தை வழங்குமாறு அவர்களிடம் கோரியுள்ளேன்.

அங்கு பல்கலைக்கழகமொன்று வேண்டுமென்றால் அதற்கு அனுமதி வழங்கத் தயார்.

கலாசார மையம் ஒன்று தேவையென்றால் அதற்கும் அனுமதி வழங்கத் தயார்.

இங்கு மட்டுமல்ல, நுவரெலியா, அநுராதபுரம், மஹியங்கனை, கதிர்காமத்தல் உள்ள அனைத்து ஜனாதிபதி மாளிகைகளுக்கும் இதே தான் நிலைமை.

இது மக்களின் பணம். மக்களின் பணத்தை வீணாக்கக்கூடாது. இந்தப் பணத்தை தேவையில்லாமல் செலவு செய்யக்கூடாது.

நாம் ஐக்கியமாக வேண்டும். இங்கே உள்ள வல்வெட்டித்துறை வாழ் குடும்பங்களைப் போன்றதொரு குடும்பத்திலிருந்துதான் நாம் இங்கு வந்துள்ளோம்.

நாமும் உங்களைப் போல சாதாரண மக்கள்தான்.

எனவே, உங்களின் இந்த நம்பிக்கையை நாம் சீர்குலைக்க மாட்டோம்.

மக்களின் பணத்தை திருடியவர்களுக்கு தண்டனைக் கொடுக்க வேண்டுமா? - இல்லையா?

இவர்களுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் தண்டனைக் கிடைக்கும்.

பிரிந்திருந்த திருடர்கள் அனைவரும் நேற்று ஒரு கூட்டத்தை நடத்தி, ஒன்றிணைவது தொடர்பாக ஆராய்ந்துள்ளார்கள்.

இந்தக் கூட்டத்தில் யாரெல்லாம் இருந்தார்கள் தெரியுமா? ஒருவர் மத்திய வங்கியை கொள்ளையடித்தவர்.

இன்னொருவர் ஆஸ்ரேலியாவில் வெள்ளையர் ஒருவரை ஏமாற்றியவர்.

இன்னொருவர் எரிபொருளில் ஊழல் செய்தவர். இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தப்பித்துக் கொள்ள முற்படுகிறார்கள். இவர்களுக்கு எதிரான விசாரணைகளை நிறுத்தவே இவர்கள் முற்படுகிறார்கள்.

ஆனால், மக்கள் எம்முடன்தான் இணைந்துள்ளார்கள். எனவே, இவர்களுக்கு எதிரான நடவடிக்கையை ஒரு போதும் நிறுத்தமுடியாது - என்றார்.(அ)

## யாழ்ப்பாண...

தெரிவிக்கையில்-

பிரதேச செயலர் பிரிவு வாரியாக சாவகச்சேரியில் 14, நல்லூரில் 07, தெல்லிப்பழையில் 06, யாழ்ப்பாணத்தில் 03, உடுவிலில் 03 என 33 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன. எனவே இந்த ரயில் கடவைகளை பாதுகாப்பானதாக அமைக்க வேண்டும்.

யாழில் நேர அட்டவணைக்கு ஏற்ப 38 புதிய பஸ்கள் தேவையாக உள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணம் சாலைக்கு 23 பஸ்களும், பருத்தித்துறை சாலைக்கு 10 பஸ்களும், காரைநகர் சாலைக்கு 05 பஸ்களும் தேவையாக உள்ளன.

யாழ்ப்பாணத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து காணப்படுகின்றன. யாழில் 06 வீதிச் சமிக்ஞை விளக்குகளே காணப்படுகின்றன. எனவே வீதி விபத்துக்களை குறைக்க வீதி சமிக்ஞைகளை அமைக்க வேண்டும்-என்றார்.

(அ-05)

## யாழ்...

இதேவேளை, அவரை தொடர்ந்து கருத்துரைத்த வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், விகாரை கட்டப்பட்ட காணியின் உரிமையாளர்கள் மற்றுமொரு காணியைப் பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

குறித்த கூற்றை மறுத்துக் கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை அவர்களைத் தொடர்ந்து கருத்துரைத்த பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, தையிட்டி விகாரை விடயத்தை வைத்து முன்னெடுக்கப்படும் அரசியல் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

மாறாக விகாரை கட்டப்பட்ட இடத்தின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதன் மூலம் இந்த பிரச்னைக்குத் தீர்வு காண முடியும் எனவும் இராமநாதன் அர்ச்சுனா குறிப்பிட்டார். (அ)

## வடக்கில்...

தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, அரச நிறுவனங்களை நடத்திச் செல்வத்தில், 30 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுவதாக அடையாளம் கண்டுள்ளது.

இதற்கமைய அந்த வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது, பட்டதாரிகளுக்கும் வாய்ப்புக் கிடைக்கும்.

பொலிஸ் திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு, தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படும்.

வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், பரந்தன், மாங்குளம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் மூன்று புதிய கைத்தொழில் வலயங்களை உருவாக்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனால் யுத்தம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையர்களை முதலீடு செய்ய அழைப்பு விடுக்கின்றோம்.

வடக்கு மாகாணத்தின் மீது விசேட அக்கறை செலுத்தி, அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அடுத்த வருடம் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய புதிய சுற்றுலாத் தலங்கள் இனங்காணப்பட்டு அவற்றை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாண அரச சேவைக்கான புதிய ஆட்சேர்ப்புகளை, அரசியல் அதிகாரத்தின் தலையீடு இன்றி தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், அரச சேவையை வடக்கில் மேலும் பலப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

வடக்கு மக்களுக்கு பாரிய பிரச்னைகள் இருப்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

வடக்கின் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, விவசாயம் உட்பட முழு அரச சேவையையும் மேலும் வலுப்படுத்துவது குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்.

மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த, அரசியல் அதிகார தரப்பும் அரச பொறிமுறையும் இணைந்து செயற்பட வேண்டும்.

கடவுச்சீட்டு பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுத்து வருகின்ற நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில், கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அதற்கான அலுவலகம் அமைப்பது தொடர்பில், மாவட்ட செயலாளருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்-என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்றார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன் கருணானந்தன், சண்முகநாதன் பவானந்தராஜா, ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி, சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இராமநாதன் அர்ச்சுனா, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எம்.பிரதீபன், பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய மற்றும் வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான முப்படை அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது, சுகாதாரம், கடற்றொழில், சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு, போக்குவரத்து பிரச்சினைகள், ஆளணிப் பற்றாக்குறை, காணி விடுவிப்பு உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

தீவுப் பகுதிகளில் போக்குவரத்து சீராக இல்லை எனவும், கிராமப் புறங்களில் சிறு வீதிகளை இணைத்து முன்னெடுக்கப்பட்ட பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், கிராமப் புறங்களில் கூடுதலான பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

வீதி அபிவிருத்தி தொடர்பாகவும், தீவுகளுக்கான போக்குவரத்து குறைபாடுகள் குறித்தும், படகு சேவைகள் ஆரம்பிப்பது குறித்தும் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

தற்போதைய அரசாங்கம், வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து கட்டமைப்பை பலப்படுத்த, வலுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

அதற்கமைய, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகள் இணைந்து செயற்படும் திட்டமொன்றை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திற்கான ரயில் சேவைகளை அதிகப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

வடக்கில் சில துறைகளில் காணப்படும் ஆளணிக் குறைபாடு தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

கடற்றொழில் பிரச்னைகள் ஆராயப்பட்டதுடன், இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாகவும், வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவது குறித்தும், இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பிரச்னைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் குறிப்பிட்டார்.

மீன்பிடி பிரச்னைக்கு தீர்வு காண இராஜதந்திர ரீதியில் அதிகபட்சமாக தலையீடு செய்வதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மீன்பிடித் துறைமுகம், மீனவர்களுக்கான வீட்டுத் திட்டம், தீவுகளுக்கான படகுச் சேவைகளில் உள்ள குறைபாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

நீர்ப் பிரச்னை தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டனர்.

நீர் விநியோக திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டிலேயே மிகக் குறைந்த அளவு குழாய் நீரை பயன்படுத்தும் மாகாணமாக வடக்கு மாகாணம் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், தற்போது வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீர் திட்டங்கள் துரிதப்படுத்தப்படும் என்பதுடன், இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில், புதிய நீர் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட வைத்திய சாலைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்திய சாலையில் காணப்படும் குறைபாடு தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கருத்து வெளியிட்டார்.

சீரீ ஸ்கானிங் இயந்திரம், அவசர சிகிச்சைப் பிரிவு போன்ற குறைபாடுகள் தொடர்பில் முன்வைத்ததுடன் அவை அவசர தேவையாக இருப்பதாக குறிப்பிட்டார்.

தமிழ் புற்றுநோயாளர்கள் மகரகமவில் இருந்து இங்கு அனுப்பப்படுவதில் ஏற்படும் சில சிக்கல்கள் குறித்தும், சிறிய வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும், பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார்.

வைத்தியர் இடமாற்றங்களால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன் மற்றும் சண்முகநாதன் பவானந்தராஜா ஆகியோர் கருத்து வெளியிட்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் அரசியல் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளார் பஸில் ராஜபக்ஷ?

## அமெரிக்காவில் இருந்தவாறே திட்டம் வகுப்பு

கொழும்பு, ஜன. 31

**பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரும், முன்னாள் அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ மீண்டும் தனது அரசியல் செயல் பாடுகளை ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

இதன்படி பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையில் பரந்து பட்ட எதிர்க்கட்சிக் கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சி யொன்றை அவர் முன்னெடுத்துள்ள தாகத் தெரியவருகின்றது.

அதற்காக அமெரிக்காவில் இருந்தவாறே இலங்கையில் உள்ள பல்வேறு கட்சிகளின் தலைவர்களு டன் அவர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான அரசாங் கத்தின் நடவடிக்கைகளை மக்கள் மயப்படுத்தி, அதன் ஊடாக தங்கள்



கட்சி இழந்துள்ள செல்வாக்கைத் தூக்கி நிமிர்த்துவதற்கான செயற் பாடுகளையும் அவர் முன்னெடுத் துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

# திருடர்களைக் கைது செய்ய வந்த அரசாங்கத்துக்கு என்ன நடந்தது?

## சமிந்த விஜேசிறி எம்.பி. கேள்வி

கொழும்பு, பெப். 01

திருடர்களை கைது செய்வதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு என்ன நேர்ந்தது என பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பி னார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

திருடர்களை கைது செய்வதாக கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு என்ன நேர்ந்தது என வினவ விரும்புகின்றோம். ஆட்சிக்கு வருவதற்கு முன் பாக கோப்புக்களுடன் ஊடக சந்திப்பை நடத்தி திரு டர்களைப் பிடிக்கப்போவதாக கூறினர்.

ஆனால் அந்த விடயத்துக்கு இப்போது என்ன நேர்ந்துள்ளது ? திருடர்களை கைது செய்துள்ளனரா என வினவ விரும்புகின்றோம். குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திடம் முறைமையொன்று இல்லாத நிலைமையே காணப்படு கின்றது.

அந்த வகையில் நோக்கும்போது பொய்யுரைத்து ஆட்சிக்கு வந்தமையை போன்று பொய்யுரைத்து நாட்டை கொண்டு நடத்த முடியும் என எண்ணுகின் றனர்.ஆட்சியை கொண்டு நடத்த முடியவில்லையாயின் அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டும்-என்றார். (அ)

# சுப்பர் டீசல் விலை உயர்வு

கொழும்பு, பெப். 01

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் படி நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சுப்பர் டீசலின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, 313 ரூபாவாக இருந்த சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 18 ரூபாவினால் அதிகரிக்கப்பட் டுள்ளதுடன், அதன் புதிய விலை 331 ரூபாவாகும்.

எவ்வாறாயினும், ஏனைய எரிபொருள்களின் விலை களில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வசந்த கரன்னகொடவின் மனுவை விசாரிக்க புதிய நீதியரசர் குழாம்!

கொழும்பு, பெப். 01

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட வினால் சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரிப்பதற்காக புதிய ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு நியமிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் புறநகர் பகுதி களில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக் கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கொழும்பு மேல் நீதி மன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் அடங்கிய அமர்வு பிரதிவாதியாக பெயரிடுமாறு கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த ஐவரடங்கிய குழுவின் உறுப்பினர் அமல் ரணராஜா நேற்று முன் தினம் விசாரணையில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இதன்படி, புதிய ஆயம் ஒன்றை பெயரிடுவதற்கான உரிய மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன தலை மையிலான அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்படி, குறித்த மனுவை விசாரிப்பதற்காக மாயா துன்னே கொரயா, பி குமரன் ரட்ணம், சஷி மகேந்திரன், தமித் தோட்டவத்த மற்றும் பிரதீப் ஹெட்டியாராச்சி ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு நியமிக்கப்பட்டது.

இது தொடர்பான மனு பெப்ரவரி 7ஆம் திகதி புதிய நீதியரசர்கள் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

11 இளைஞர்கள் காணாமற்போனமை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தம்மை பிரதிவாதியாக பெயரிட சட்டமா அதிபர் எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என முன்னாள் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

எனவே, சட்டமா அதிபரின் தீர்மானத்தை செல்லு படியாகாத ஆணை பிறப்பிக்குமாறு அவர் மேன்முறை யீட்டு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# கொழும்பு - காங்கேசன்துறை இடையே இரவு ரயில் சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 01

வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்புப் பணிகள் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த கொழும்பு கோட்டை மற்றும் காங்கேசன் துறைக்கு இடையிலான இரவுநேர ரயில் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுமார் இரண்டு ஆண்டுகளுக் குப் பின்னர் இந்த ரயில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படு வதாக ரயில் திணைக்களத்தின் பொது முகாமையாளராக தம் மிக்க ஜெயசுந்தர தெரிவித் தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தின் புனரமைப்பு பணிகள் காரணமாக யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆளணிப் பற்றாக்குறை கார ணமாக குறித்த ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதில் காலதாம தம் ஏற்பட்டது.

இருப்பினும் அமைச்சரின் ஆலோசனைக்கமைய ரயில் சேவையை வழமை நிலைக்கு கொண்டுவரும் வகையில், இரவு நேர ரயில் சேவை நேற்று கொழும்பு கோட்டையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கான ஏனைய அனைத்து ரயில் சேவைகளையும் விரைவில் முன்னெடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படும் என ரயில் திணைக்களத்தின் பொது முகாமை யாளராக தம்மிக்க ஜெயசுந்தர தெரிவித்தார். (அ)

# மாவை சேனாதிராசாவின் அர்ப்பணிப்பு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, பெப். 01

மக்கள் சேவைக்காக தனது வாழ்வை அர்ப்பணித்த சிரேஷ்ட அரசியல் தலைவரான மாவை சேனாதிராசாவின் மறைவை அறிந்து நான் மிகவும் வருத்தமடை கிறேன். தமிழ் மக்களின் உரிமை களைப் பாதுகாப்பதில் அவரது அர்ப்பணிப்பும் ஈடுபாடும் இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு முக்கிய ஆளு மையாகவும் திகழ்ந்த சேனாதிராசா, இன ஒற்றுமை மற்றும் நல்லிணக் கத்திற்காக பாடுபட்ட அதே வேளையில், தனது மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷை களுக்காக ஒரு முன்னணிப் பங்கை வகித்தார். ஜனநாயக நடவடிக்கைக ளுக்கான அவரது அர்ப்பணிப்பு மற்றும் அமைதியான அரசியல் இயக்கத்தின் மீது அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கை ஆகியவை பாராளுமன்றத்தில் அவரது பல தசாப்த கால சேவைக் காலத்தில் சிறப்பாக பிரதிபலித்தது.

அவரது மறைவு அவரை அறிந்த மற்றும் அவருடன் பணியாற்றிய அனைவருக்கும் ஈடுசெய்ய முடி யாத இழப்பாகும். அவரது மறை வினால் வாடும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை இழந்து வாடும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீதி மற்றும் சமத்து வத்தை நிலைநாட்ட பாடுபடும் எதிர்கால தலைமுறையினருக்கு அவர் பற்றிய நினைவுகள் ஆசீர்வாத மாக அமைய என பிரார்த்திக்கி றேன் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஈழத்தமிழர் எதிர்கொள்ளும் பிரச்னைகள்: புதுடில்லியில் பன்னாட்டுக் கருத்தரங்கம்

புதுடில்லி, பெப். 01

புதுடில்லியில் கடந்த திங்கள்கிழமை டில்லிப் பல்கலைக்கழக நவீன இந்திய மொழி கள் மற்றும் இலக்கிய ஆய்வுகள் துறையும், ஆஸ்திரேலிய தமிழர் பேரவையும் இணைந்து ஒருங்கிணைத்த "இலங்கைத் தமிழர்கள் மற்றும் காஷ்மிர் பண்டிட்கள் எதிர்கொள்ளும் பாதிப்பு கள் மற்றும் உயிர்பிழைத்தலின் பாலினம் சார்ந்த பெருங்கதையாடல்கள்" எனும் பொருண்மையிலான பன்னாட்டுக் கருத்தரங் கம் நடைபெற்றது.



நிகழ்வில், கருத்தரங்குக்கு சமர்ப்பிக்கப் பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் ஆய்வுச் சுருக் கங்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டது.

கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர். தி. உமாதேவி, ஆஸ்திரேலிய தமிழர் பேரவையின் தலைவர் கிருஷ்ணபிள்ளை இளங்கோ, அமெரிக்கத் தமிழர் செயற்பாட்டுக் குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசாமி, தமிழர் புலம்பெயர் அமைப்புகளின் இந்திய ஒருங்கிணைப்பாளர் கதிரவன், கலைப்புலத் தலைவர் பேராசிரியர் அமிதாவ சக்ரபார்த்தி, அதிதி மகாவித்யாலயா கல்லூரியின் முதல்வர் பேராசிரியர் மம்தா சர்மா ஆகியோர் வெளியிட்டனர்.

இந்த பன்னாட்டு கருத்தரங்கில், புலம்பெயர்வு, அடையாள இழப்பு, அகதிகள் மறுவாழ்வு முகாம், போருக்குப் பின்னான மன உளைச்சல், பாலினம் - அதிகாரம் - ஒடுக்கு முறை, கட்டாயப்படுத்தப்பட்ட புலம்பெயர்வின் பொருளாதார விளைவுகள் போன்ற கருப்பொருள்களில் 42 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக் கப்பட்டன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org